Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Love in *Kurunthogai*

**Dr.D. Amsavalli**, Assistant Professor of Tamil,
Pachiyappas College For Women, Kanchipuram, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2247-1551**
**DOI: 10.5281/zenodo.6619166**

## Abstract

*Sangam literature is a mirror that depicts the civilization, culture and customs of the ancient Tamils who lived two thousand years ago. "Kurunthogai" features a set of anthologies. The short story is hailed as the most popular anthology, "A world without water" as well as world movements without love, love is given many names. They are Thalaivan – Thalaivi (Hero-heroine) love, Emotions of relationships such as mother-son affection, brother-sister affection brother - brother brotherhood also form the status of relationships. As a result, the feelings of the other relationships may be rekindled. In short, male-female love is compared with cold water, The sky is full of lust and pearl scattering snow and time divisions are compared to love. There were no splits except for the grief in the introspective section of life. This article is set to tell the story of the leader's love in a life of secret love, (chastity Love – Karpu Kadal).*

**Keywords:** *Kurunthogai*, Clash of Relatuionships, Agam Songs (External Affairs)

## References

[1] *Tamil Literary Information Repository*. Dr Devira (Rasendran), Sreenandini Publishing, Chennai.
[2] *Perspectives on Tamil Literature*. Department of Tamil and Indian Languages, Coimbatore.
[3] *Shorthand*. Editor-in-Chief K.V. Balasubramaniam, New Century Book House, Chennai.
[4] *Tolkappiyam Economics*. VT Ramasamy Maniyam, Poompuhar Publishing House, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# குறுந்தொகை காட்டும் காதல்

**முனைவர் தே. அம்சவள்ளி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2247-1551**
**DOI: 10.5281/zenodo.6619166**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியம் இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழந்தமிழர்களின் நாகரிகம் பண்பாடு பழக்கவழக்கம் போன்றவைகளை சிறப்பித்துக் கூறும் கண்ணாடியாக திகழ்கிறது பதினெண்மேற்கணக்கு அகப்பொருள் சார்ந்த நூல்கள் இடம் பெற்றுள்ளன. அதிக எண்ணிக்கை கொண்ட நூலாக குறுந்தொகை போற்றப்பட்டுள்ளன. நீரின்றி அமையாது உலகு அது போல் காதல் இன்றி உலகை இயக்கங்களின் நடைபெறாது காதலை பல பெயர்களால் வழங்கப்பட்டு உள்ளன. அவை தலைவன் தலைவி காதல், தாய்மகன் பாசம் ,அண்ணன் தங்கைபாசம், அண்ணன் தம்பி சகோதரத்துவம் போன்ற உறவுகளின் உணர்வு பந்தங்களை உருவாக்குகின்றன. இதன் விளைவாக இன்ன பிற உறவுகளின் உணர்வுகளை தழைக்கச் செய்கிறது எனலாம். குறுந்தொகையில் ஆண்-பெண் காதலை குளிர்ந்த நீருடனும், வானத்தை ஓங்கிய காமம், முத்து சிதறிய பனிக்கால பிரிவும் எடுத்துக் கூறுகிறது பிரிவில் வருத்தம் இருந்ததே தவிர குடும்ப பிளவு ஏற்படவில்லை களவு கற்பு வாழ்க்கையில் தலைவியின் காதலை தருவதாக கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** குறுந்தொகை, கண்ணாடி, பந்தங்களின், பிளவு, அகப்பாடல்,

**முன்னுரை**

மனிதனின் மன உணர்வின் அடிப்படையில் காதல் தோன்றியது காதல் இல்லாமல் வாழமுடியாது இவ்வுலகத்தில் காதலுக்கு மிகுந்த பங்குண்டு இவ்வுலகம் காதல் கருணை காவியம் கவிதை போன்றவை பிறக்கின்றன. அன்போடு இயைந்த வாழ்க்கை மேன்மை அடையும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். அகத்திணை களவு, கற்பு என பிரிக்கின்றன. தலைவனும் தலைவியும் தனியிடத்தில் சந்தித்து காதல் புரிவது தம் முயற்சியாலும் பாங்கன் பாங்கி முயற்சியாலும் காதல் கொள்வது களவு என்றும் பலர் அறிய திருமணம் செய்து கொள்வது கற்பு எனப்படும்.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணும் காலை மறையோர்தே எத்துமன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த்துணையோர் இயல்பே! (தொல்.பொருள்.89)**

காதல் புரிந்து திருமணம் செய்த வாழ்வில் இன்பம், பொருள், அறம் மூன்றும் மேலோங்கி நிற்கும் என்பதனை வலியுறுத்தியுள்ளார். ஐந்திணைகளில் கூறப்பட்ட தலைவன் தலைவி ஒப்புமைகளை தொல்காப்பியர்,

**பிறப்பேகுடிமை ஆண்மை ஆண்டோடு**
**உறவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வோடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல்.பொருள்.269)**

என்றுகூறியுள்ளார். இலக்கியங்களும் அதனை அடியொற்றிப் களவு, கற்பு என்ற பிரிவில் வைத்து காதல் மாண்பினை போற்றியுள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கியமான குறுந்தொகையில் காதல் மாண்பினை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது. தலைவன் பொருள் ஈட்டுவதற்காக பிரிந்து சென்றுள்ளான். சூரியன் மறைகின்றான் மாலைப்பொழுதும் வருகிறது பறவைகள் இல்லத்திற்கு வந்து சேர்ந்தது இதனைக் கண்ட தலைவி தன் தலைவன் தன் இல்லத்திற்கு வரவில்லையே என்று கூறுகின்றாள்.

**ஞாயிறுபட்ட அகல்வாய் வானத்து**
**அளியதாமே கொடுஞ்சிறை பறவை**
**ஓங்கிய நெறிஅயல் இரையுற மராஅத்த (குறுந்தொகை 92)**

என்ற பாடல் விளக்குகிறது. தலைவன் நாட்டில் விழும் அருவியை வைத்து குணத்தில் சிறந்தவன் என்று முடிவு செய்து தலைவி தலைவனை விரும்புவதாக கூறுகின்றாள்

**புல்வீழ் இற்றிகல்லிவர் வெள்வேர்**
**வரையிழி அருவியின் தோன்றும்நாடன்**
**தீதுயில்நெஞ்சத்துக்கிளவிநம்வயின்**
**வந்தன்றுவாழிதோழி (குறுந்தொகை 106)**

என்ற பாடல் விளக்குகிறது. காதலரை நினைத்தால் என் உள்ளம் தீயினால் சுடுகிறது நினைக்காமல் இருக்கலாம் என்றால் காமநோய் அதிகமாக நீள்கிறது நான் என்செய்வேன் சாவதை தவிர வேறுவழியில்லை என்று கூறுகின்றாள்.

**உள்ளின் உள்ளம்வேமேஎம்உள்ளாது**
**இருப்பின் என்அளவைத்து அன்றேவருந்தி**
**வான்தோய்வற்றேகாமம்**
**சான்றோர்அல்லர்யாம்மரீஇயோரே (குறுந்தொகை 102)**

அளவுகடந்த அன்பு காமநோய்க்கு காரணமாக அமைகின்றது என்பதை உணர்த்துகிறது. தன் தோழியிடம் தலைவியானவள் காலத்தில் சென்ற தலைவன் பல நாளாகியும் இன்னும் வரவில்லையே நான் வாழ்வதுவிட இறந்து விடுவதே நல்லது என்று கூறுவதாக அமைந்துள்ளது.

**அம்மவாழி தோழி காதலர்**
**நூல் அறுமுத்தின்தன் சிடர் விரைப்ப**
**தாளின் தண்பவர் நாள்ஆ மேயும்**
**பனிபடு நாளே பிரிந்தனர்**
**பிரியும் நாளும் பலவா குபவே. (குறுந்தொகை 104)**

என்ற பாடல் மூலம் பெண்ணானவள் தனியாக வாழ முடியாது என்பதை கூறுவதாக அமைந்துள்ளது. தலைவனுடன் இன்பத்தைத் தரும் தூக்கத்தில் எழுப்பிவிட்டது சேவல் மீது கோபப்பட்டு தலைவியானவள் நீ காட்டு பூனைக்கு உணவாகப் பயன்படுவாய் என்று சாபமிடுகிறார்.

**குவியிணர்த் தோன்றிஒண்பூவன்ன**
**தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்**
**நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்**
**பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்**
**கடுநவைப் படீஇயரோ நீயே (குறுந்தொகை 104)**

தலைவிக்கு இன்பம் தருவதே தலைவனுடைய அன்பு மட்டுமே தவிர வேறு எதுவுமில்லை என்பதை காட்டுகின்றது. தெய்வத்திற்கு விடப்பட்ட திணையை உண்டு உண்டு மயில் நடுக்கம் கொண்டு ஆடுவதைப் போல் தலைவன் மீது நட்பு கொண்டு அவன் பிரிவால் நடுங்கி துன்பம் அடைகின்றாள்.

**புனவன்துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடியுண்கடவுட்கு இட்ட செழுங்குரல்**
**அறியாது உண்ட மஞ்சைஆடுமகள்**
**வெறியுறு வனப்பின்வெய் துற்றுநடுங்கும்**
**சூர்மலை நாடன் கேண்மை**
**நீர்மலிகண்ணொடு நினைப்பு ஆகின்றே (குறுந்தொகை 105)**

பெண்ணின் ஒவ்வொரு உணர்வுகளும் ஆண்களின் பதிவாக கொள்ளப்பட்டது. வாடைக்காற்று வீசுகிறது வாடைக்காற்று நீரிலுள்ள மலர்களும் நிலத்திலுள்ள மலர்களும் மலரச்செய்து தன்னையும் வாட்டுகிறது தலைவனும் வாராமல் இருக்கிறாரே இறந்துபோய் விடுவேன் என்கிறாள்

**நீலப்பைம் போது உளரிபூதல**
**பீலிஒண் பொறிக்கருவிளைஆட்டி**
**நுண்முள் ஈங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த**
**வண்ணத்துய்ம் மலர்உதிர தண்ணெண்று**
**இன்னாறு எறிதரும் வாடையொடு**
**எம்ஆயினள் கொள் என்னாதோரே (குறுந்தொகை 110)**

தலைவியின் நட்பு என்றும் மாறாதவை என்று பெறப்படுகிறது. தலைவனும் தலைவியும் முன்பின் அறியாதவர்கள் உன் தந்தை என் தந்தை எம்முறை ஆனவர்கள் என்பது பற்றி கவலை இல்லை ஊழ்வினையால் ஒன்று சேர்ந்தோம் என்பதை,

**யாயும்யாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்**
**யானும்நீயும் எவ்வழியறிதும்"**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்தொகை 45)**

ஒன்றுபட்ட காதல் உள்ளங்களின் பிணைப்பை பற்றி இப்பாடல் கூறுகின்றது.

**முடிவுரை**

சங்ககாலத்தில் தலைவன் தலைவி உள்ளார்ந்த மன உணர்வுடன் வாழ்ந்து வந்தனர் களவு காலத்திலேயும் கற்பு காலத்திலேயும் அவர்களுடைய நட்பு எந்த வகையிலும் குறைந்த பாடில்லை என்பதை சங்கஇலக்கியம் நமக்கு காட்டவில்லை பொருள்வயின் பிரிதல் பரத்தையின் பிரிதல் இப்பிரிவில் மனஉளைச்சலுக்கு ஆளாகி அதைத்தவிர பிரிந்து வாழ்ந்ததாக எந்த ஒரு இலக்கியமும்

காட்டவில்லை ஒன்றுபட்டு வாழ்ந்தனர் என்பதை இலக்கியம் காட்டுகின்றது உள்ளத்திலும் வாழ்வின் இன்பத்தை மட்டுமே அவர்கள் கண்டார்கள்.

**துணைநூற் பட்டியல்**

[1] *தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம்*, முனைவர் தேவிரா (இராசேந்திரன்), ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை.

[2] *தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்*, தமிழ் மற்றும் இந்திய மொழிகள் துறை, கோயம்புத்தூர்.

[3] *குறுந்தொகை*, தலைமை பதிப்பாசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

[4] *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, வ.த.இராமசாமி மணியம், பூம்புகார் பதிப்பகம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.